அடுத்து பேரவை முன்னுள்ள கேள்வி—

''நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்று, 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (நாற்பத்தி நான்காவது திருத்தச்) சட்டம் என்று மாற்றப்பெற்ற, குறுந்தலைப்பினைக் கொண்ட, 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (நாற்பத்தி ஐந்தாவது திருத்தச்) சட்ட முன்வடிவினால் செய்யக் கருதப் பெற்றுள்ள, இந்திய அரசியலமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின் கீழ் வரும் திருத்தங்களுக்கு, இப்பேரவை ஏற்பளிக்கின்றது.''

அரசினர் தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 19—2—78 அன்று காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–47 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

6. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

94. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வாகன விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 19-9-1978 ஆம் தேதியிடப் பெற்ற உள்துறையின் 2274 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*27 தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 1/1979).

*28. தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவிற்கான இணைப்பு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 1/1979).

---

* 15—2—1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.

1979 பிப்ரவரி 17]

29. 27–8–1969 ஆம் தேதியன்று தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையில் நிறைவேறிய தீர்மானத்திற்கிணங்க 31–3–1978 ஆம் தேதியன்று உள்ளவாறு, கீழ்க்கண்ட சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களின் சொத்திருப்பு பற்றிய விவரக் கணக்குகள் பேரவை முன் வைக்கப் பெற்றன:—

1. திரு. க. இரா. சின்னராசு
2. திரு. எச். ஜி. ஆறுமுகம்
3. திரு. என். கிட்டப்பா
4. திரு. ரா. உமாநாத்
5. திரு. கூத்தக்குடி ச. சண்முகம்
6. திரு. ரா. நாராயணன்
7. திரு. இரா. இராசமாணிக்கம்
8. திரு. ப. க. சி. முத்துசாமி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS